**<u>சுருக்கம்</u>**

பணிகள் – பல்லவபுரம் நகராட்சி – பாதாளச் சாக்கடைத் திட்டம் – திட்டப்பணிகள் முடிவடைந்த பகுதிகளில் சேதமடைந்த சாலைகளை ரூ. 670.24 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பித்தல் – நிர்வாக அனுமதி வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.3) துறை</u>

அரசு ஆணை (ப) எண்: 380 நாள்: 22 .07. 2010

<u>படிக்கப்பட்டது</u>:

1. பல்லவபுரம் நகராட்சி ஆணையர் ந.க.எண். 4837/2009/இ1, நாள். 29.04.2010.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித ந.க.எண்.22208/ 2010/ப்பி3, நாள். 28.06.2010.

**<u>ஆணை:-</u>**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், பல்லவபுரம் நகராட்சியில் ரூ. 75.33 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மூலம் வைப்புத் தொகைத் திட்டமாக நடைபெறுகிறது என்றும், இத்திட்டத்தின் கீழ் 157 கி.மீ நீளத்திற்கு கழிவுநீர் குழாய்கள் பதிக்கும் பணி முடிவுற்றுள்ளது என்றும் கூறியுள்ளார்.

2) பாதாள சாக்கடைத் திட்டத்தில் 90% பணி தற்போது நிறைவுற்றுள்ளது என்றும் குழாய் பதிக்கும் பணியினால் சேதமடைந்த சாலைகளில் 92.87 கி.மீ நீளமுள்ள சாலைகள் நகராட்சி நிதியிலிருந்தும் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திடம் பெற்ற சாலை சீரமைப்பு கட்டணத்தினைப் பயன்படுத்தியும் ரூ.1702/– இலட்சம் மதிப்பீட்டில் செப்பனிடப்பட்டுள்ளது என்றும், மீதமுள்ள 64.13 கி.மீ நீளமுள்ள சாலைகளைச் செப்பனிட்டு புதுப்பிக்க வேண்டியுள்ளது என்றும் இதற்கு நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லை என்பதால் தமிழ்நாடு நகர்ப்புற நிதி வளர்ச்சி நிறுவனத்திடம் கடன் கோர பல்லாவரம் நகர்மன்ற தீர்மானம் எண். 90, நாள்.31.07.2009–ல் தீர்மானித்து செயற்குறிப்பு அனுப்பப்பட்டது என்றும் கூறியுள்ளார்.

3) தமிழ்நாடு நகர்ப்புர நிதி வளர்ச்சி நிறுவன தலைமை நிர்வாக அலுவலர் தனது 01.03.2010 நாளிட்ட கடிதத்தில் இத்திட்டத்தினை கீழ்க்கண்ட நிதி ஆதாரங்களுடன் செயல்படுத்தலாம் என்றும், ஆனால் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளை 27 செறிவு பணிகளாக (package) எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் நிதித் தகுதி அறிக்கை அளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. கடன் | (60%) | – ரூ. 402.14 இலட்சம் |
| 2. மான்யம் | (30%) | – ரூ. 201.07 இலட்சம் |
| 3. நகராட்சிபங்கு | (10%) | – ரூ. 67.03 இலட்சம் |
| மொத்தம் | | – ரூ. 670.24 இலட்சம் |

அவ்வாறே பல்லவபுரம் நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 316, நாள்.29.03.2010–ல் சாலைப்பணிகளை 27 செறிவு பணிகளாக மேற்கண்ட நிதி ஆதாரங்களுடன் ரூ. 670.24 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தத் தீர்மானித்துள்ளது.

4) பல்லவபுரம் நகரில் பாதாள சாக்கடைத் திட்டம் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளில் 25.771 கி.மீ நீளமுள்ள சாலைகளை ரூ. 670.24 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி கோரும் பல்லவபுரம் நகராட்சி ஆணையரின் செயற்குறிப்பினை நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசின் ஆணை வேண்டி பரிந்துரை செய்துள்ளார்.

5) நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பு அரசினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனைக்குப் பின்னர், பல்லவபுரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளில் சேதமடைந்த 25.771 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகளை மேலே பத்தி 3–ல் கண்டுள்ள நிதி ஆதாரங்களுடன் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 5
ஆணையர், பல்லவபுரம் நகராட்சி, பல்லவபுரம்.
(நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக)

**நகல்:**
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( அந.2) துறை, சென்னை– 600 009.
இ.கோ./உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

**பிரிவு அலுவலர்.**